தலைமைப் பொறியாளர், பொ.ப.து., நீ.ஆ.து.,இயக்கம் மற்றும் பராமரிப்பு, சேப்பாக்கம், சென்னை - 5. அவர்களின் செயல்முறை ஆணைகள்.

முன்னிலை பொறிஞர். பெ. ராஜேந்திரன், பி.இ.,
தலைமைப்பொறியாளர், பொபது, நீஆது.,
இயக்கம் மற்றும் பராமரிப்பு

செயல்முறைஆணைஎண்.எ 2 /3427/ 2018 நாள் 05.06.2020

பொருள் பணியமைப்பு -பொதுப்பணித்துறை - தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதி - திரு.பா. வெங்கடேசன், தகப்பனார் பெயர் காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு. பி.பார்த்தசாரதி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் - பணிநியமனம் - பணிவரன் முறை செய்தல் - ஆணை வழங்குதல்.

பார்வை
1) முதன்மைத் தலைமைப்பொறியாளர் நீஆது, மற்றும் தலைமைப்பொறியாளர்(பொது),பொதுப்பணித்துறை, சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ் 3(4) /52351/2008 நாள்27.07.2018
2) இவ்வலுவலகக் செயல்முறை ஆணை எண் எ2/3427/2018 நாள் 23.08.2018.
3) அரசாணை (3ப) எண்.24, பொதுப்பணி (பி1)துறை நாள். 11.05.2020

"

பார்வை 1-ல் காணும் முதன்மைத்தலைமைப்பொறியாளர், நீஆது, மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) பொதுப்பணித்துறை, சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணையின்படி கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட திரு. பா.வெங்கடேசன், இளநிலை உதவியாளரின் தற்காலிக பணி நியமனம் பார்வை 3-ல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள ஆணைகளின்படி தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதியின் கீழ் இளநிலை உதவியாளர் பதவியில் 23.08.2018 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்யப்படுகிறது.

இவர் தனது தகுதிகாண் பருவத்தினை பணிவரன் முறைப்படுத்தப்பட்ட நாளான 23.08.2018 முற்பகல் முதல் துவங்கியதாகக் கருதப்படுகிறார். மேற்படி நாளிலிருந்து தொடர்ச்சியான முன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

தமிழ்நாடு சார்நிலை பணித் தொகுதி விதிகள் 23 (ஏ) (ii) -ன் படியும் தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதிகளின்படியும் திரு. பா. வெங்கடேசன், இளநிலை உதவியாளர் பதவியில் மொத்த முன்றாண்டுகள் பணிக்காலத்தில் முதல் இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்தில் பவானி சாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளருக்கான பயிற்சியினை பெற்று வெற்றிகரமாக முடித்தல் வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் 23.08.2018 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதியின் கீழ் இளநிலை உதவியாளர் பதவியல் தகுதிகாண் பருவம் துவங்கி ஆணை வழங்கப்படுகிறது.

ஒப்பம் /- பெ. ராஜேந்திரன், 05.06.2020
தலைமைப்பொறியாளர் (இஃப)

பெறுநர்,

திரு. பா. வெங்கடேசன், இளநிலை உதவியாளர்,
தலைமைப்பொறியாளர், பொ.ப. து., நீ.ஆ. து.,
இயக்கம் மற்றும் பாரமரிப்பு அலுவலகம், சேப்பாக்கம், சென்னை-5

நகல் முதன்மைத் தலைமைப்பொறியாளர், நீஆது மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது),பொதுப்பணித்துறை,சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காகஅனுப்பப்படுகிறது

Spare

தலைமைப்பொறியாளர் (இஃப) சார்பில்

5/6/20